4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **552 / 2021** நாள்: **08.07.2025** வா.சா.**1** – மகாலிங்கம்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை -

இந்த வழக்கு 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கோவிந்தராஜலுக்கு கடன் கொடுத்ததாகவும் அதை வசூலிப்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் கோழிபண்ணை மற்றும் சொட்டு நீர் குழாய் விற்கும் தொழில் செய்து வருகிறேன். நான் மாடர்ன் இர்கேசன் என்ற பெயரில் மேற்படி தொழிலை செய்து வருகிறேன். மேற்படி தொழிலை பங்குதாரராக செய்து வருகிறேன். எனக்கும் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கோவிந்தராஜலுவிற்கும் வியாபார ரீதியாக 2005 ம் ஆண்டு முதல் தொடர்பு உண்டு. மேற்படி மாடர்ன் இர்கேசன் நிறுவனத்தில் பங்குதாரராக இருப்பதற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் கோவிந்தராஜலுவிற்கும் கொடுத்த கடன் தொகையானது என்னுடைய நிறுவன பணம் அல்ல. என்னுடைய தனிப்பட்ட பணம் ஆகும். நான் 2002 ம் ஆண்டில் இருந்து வருமான வரி செலுத்தி வருகிறேன். நான் 2017 – 2018 ஆண்டிற்கான வருமான வரி கணக்கு நகலை இந்நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய இயலும். 2017 ம் ஆண்டிற்கு முன்பு இந்த வழக்கு வரவு செலவு கணக்கிற்கு முன்பாக எனக்கும் மேற்படி கோவிந்தராஜலுவிற்கும் சொட்டு நீர் குழாய் மற்றும் கோழிபண்ணை சாதனங்கள் வாங்குவது சம்பந்தமாக வரவு செலவு உண்டு. ஏற்கனவே எங்களுக்குள் வரவு செலவு உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி கோவிந்தராஜலு 2017 ம் வருடம் 7 ம் மாதம் என்னிடம் கடன் கேட்டார். தேதி ஞாபகம் இல்லை. 7ம் மாதம் கடன் கேட்கும் போது என்னிடம் பணம் இல்லாததால் நான் உடனடியாக கடன் தொகையை கோவிந்தராஜலுவிற்கு

வழங்கவில்லை. கடன் கேட்டு இரண்டு மாத காலத்திற்கு பிறகு எவ்வாறு எந்த வருமானத்தில் இருந்து மேற்படி கடன் தொகையை கோவிந்தராஜலுவிற்கு கொடுத்தேன் என்றால் சாட்சி கோழிப்பண்னை மூலம் வந்த வருமானத்தை கொண்டு மேற்படி கடன் தொகையை RTGS மூலமாக வழங்கினேன். மேற்படி கோழிப்பண்னை மூலமாக மேற்படி காலகட்டத்தில் ரூ.20 லட்சம் வருமானம் வந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். கோவிந்தராஜலு மக்காச்சோள வியாபாரம் செய்தார். மேற்படி வியாபார அலுவலகத்தின் முகவரி தற்போது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. கோவிந்தராஜலுவின் வீட்டு முகவரி சிக்கந்தர் பாட்சா வீதியில் உள்ளது. கதவு எண் எனக்கு தெரியாது. 28.09.2017 தேதியன்று RTGS மூலமாக கோவிந்தராஜலுவிற்கு கடன் தொகையை அனுப்பினேன். மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக கோவிந்தராஜலுவிடம் இருந்து கடனுறுதி சீட்டோ, ரசீதோ நான் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் மேற்படி கடன் தொகையை மேற்படி கோவிந்தராஜலுவிற்கு வட்டிக்காக கொடுக்கவில்லை. மேற்படி தொகைக்கு வட்டி தருவதாக கோவிந்தராஜலு என்னிடம் உறுதி அளிக்கவில்லை. நான் கடன் கொடுத்த மேற்படி தொகையை என்னுடைய வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேன். நான் ஏலச்சீட்டு மற்றும் பைனான்ஸ் தொழில் எதுவும் நடத்தி வரவில்லை. 2018ம் வருடம் நான் கடனை திருப்பி கேட்ட போது கோவிந்தராஜலு எனது வீட்டிற்கு வந்து பின்தேதியிட்ட காசோலையை என்னிடம் கொடுத்தார். சாட்சி லோகநாதன் எனது சகோதரர். என்னுடைய வழக்குரையில் 5வது பத்தியில் நான் வழங்கிய அசல் தொகைக்கு ரூ.100 க்கு ரூ.1 வட்டி தருவதாக கோவிந்தராஜலு ஒப்புக்கொண்டார் என்று சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் சரிதான். 2014 – 2015 ஆண்டு காலகட்டத்தில் இருந்தே நான் ஏலச்சீட்டு நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் நடத்திய ஏலச்சீட்டில் கோவிந்தராஜலு தரப்பினராக சேர்ந்து மாதசீட்டாக பணம் செலுத்தி வந்தார்

என்றால் சரியல்ல. நான் ஏலச்சீட்டு தொகையை கோவிந்தராஜலுவின் வங்கி கணக்கில் செலுத்துவதற்காகவும், அவருடைய வங்கி கணக்கு எண்ணை தெரிந்து கொள்வதற்காக அவரிடம் இருந்து அவருடைய கையெழுத்து இல்லாத 4 முதல் 5 காசோலைகளை பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள காசோலைகளில் உள்ள கையொப்பங்கள் மற்றும் இதர வாசகங்களும் கோவிந்தராஜலுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையாகவே மேற்படி கோவிந்தராஜலுவிற்கு பணம் கொடுத்திருந்தால் கடனுறுதி சீட்டும், ரசீதும் பெற்றிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. ஏலச்சீட்டில் கோவிந்தராஜலுவிற்கு நான் செலுத்த வேண்டிய பணத்தை தான் நான் RTGS மூலமாக ரூ.20 லட்சத்தை கோவிந்தராஜலுவின் வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஏலச்சீட்டு தொகையில் ரூ.20 லட்சம் போக மீதம் ரூ.2 லட்சம் கோவிந்தராஜலுவிற்கு இன்னும் செலுத்த வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. கோவிந்தராஜலு 2018ம் வருடம் லிங்கமநாயக்கன் புதூர் தோட்டத்தில் வைத்து காலமானார். கோவிந்தராஜலு காலமான பிறகு 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடம் இருந்து நான் கொடுத்த கடனை வசூல் செய்ய உடனடியாக நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2021 ம் ஆண்டு அதாவது 3 ஆண்டுகள் கழித்து கடன் தொகை வசூல் செய்ய வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்பினேன் என்றால் சரியல்ல. எந்த வருடம் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. கோவிந்தராஜலு காலமான பிறகு அவர் பெயரில் உள்ள சொத்துக்களை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் எனக்கு கொடுத்து வைத்திருந்த காசோலையை தவறாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள காசோலைகளில் இருந்து கோவிந்தராஜலுவிடம் இருந்தும், அவரது வாரிசுகளிடம் இருந்தும் எவ்வித தொகையும் பெற எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. கோவிந்தராஜலுவிற்கு 10 ஏக்கர் நிலம் இருக்கும்

விவரம் எனக்கு தெரியும். மேற்படி கோவிந்தராஜலு நிலம் வைத்திருக்கும் ஊரில் ஒரு ஏக்கர் ரூ.40 முதல் 50 லட்சம் மதிப்புடையது என்று சொன்னால் சாட்சி அதுபற்றி தெரியாது என்று கூறுகிறார். கோவிந்தராஜலுனுடைய சொத்தின் மதிப்பு எனக்கு தற்போது வரை தெரியாது என்று சொன்னால் சரியல்ல. கோவிந்தராஜலுவின் வீடு சிக்கந்தர் பாட்சா வீதி, உடுமலைபேட்டையில் உள்ளது. மேற்படி வீட்டின் மதிப்பு ரூ.2 கோடி இருக்கும். மேற்படி ரூ.2 கோடி மதிப்புள்ள வீடுகள் மற்றும் சொத்துக்களை ஜப்தி செய்ய வேண்டும் என்று மனுதாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.